# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 309/மா/2023**
**நாள்: 22.11.2023**

திரு. த. விக்னேஸ்வரன்,
திருச்சிராப்பள்ளி . – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம் -1,
ஸ்ரீரங்கம் மண்டலம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சி மாவட்டம், கிராப்பட்டி, அருணாச்சல நகர், 5வது தெரு, கதவு எண். 71 என்ற முகவரியில் வசிக்கும் திரு. த. விக்னேஸ்வரன் என்பவரின் 8.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2023–ல் பெறப்பட்டு 309/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சி மாவட்டம், கிராப்பட்டி, அருணாச்சல நகர், 5வது தெரு, 71 என்ற முகவரியில் வசிக்கும் திரு. த. விக்னேஸ்வரன் என்பவர் 8.10.2023 நாளிட்ட மனுவில்:-

திருச்சி காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றுக்கு இடைப்பட்ட நிலப் பகுதியில் பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் தலமாகப் போற்றப்படும் கோவில் திருச்சி திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அம்மன் உடனுறை ஜம்புகேசுவரர் கோயிலாகும். சுமார் 2500 வருட மிகவும் பழமை வாய்ந்த இக்கோயிலுக்கு வெளிநாட்டிலிருந்தும் மற்றும் வெளி மாநிலத்திலிருந்தும் தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இக்கோவிலுக்கு திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையான கன்னிமார் தோப்பு–வடக்கு கோபுரம் சாலையாகும். மேற்கண்ட சாலை திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வெள்ளி திருமுத்தம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட டவுன் சர்வே வார்டு C, பிளாக் 2, நகரளவை எண்.52-ல் அமைந்துள்ளது. மேலும் மேற்கண்ட சாலையின் அகலம் மாநகராட்சி நில அளவை பதிவேட்டின்படி 0.19.8 மீட்டராக (அதாவது 65 அடி) பதிவாகி உள்ள நிலையில் சிலர் வீடுகள் மற்றும் வேலிகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர்.

இந்நிலையில், நகர நில அளவை பதிவேடு வரைபடத்தின்படி சுமார் 65 அடி அகலமுள்ள சாலையில் 40 அடிவரைக்கும் ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் புறவழி சாலையிலிருந்து வாகனங்கள் கோவிலுக்கு செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 17.10.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனு மீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 14.11.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரர் தனது மனுவில் திருவானைக்கோவில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்மன் உடனுறை ஜம்புகேசுவரர் திருக்கோவிலுக்கு திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து செல்லும் பிரதான சாலையான கன்னிமார் தோப்பு – வடக்கு கோபுரம் சாலையில் உள்ள ஆக்கிரமிப்பு, வருவாய் ஆவணங்களின்படி டவுன் சர்வே வார்டு C பிளாக் 2, நகரளவு எண்.113, சர்க்கார் புறம்போக்கு 0.03190 ச.மீ. கொள்ளிட ஆற்று ரோடு என உள்ளது. இந்த இடத்தில் 23 நபர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்பினை அகற்றிட மனுதாரர் கோருகிறார். ஆக்கிரமிப்புதாரர்களின் வாழ்வாதாரத்தினை கருதி தகுதியான மாற்று இடம் வழங்கக் கோரி ஸ்ரீரங்கம் வட்டாட்சியருக்கு 14.11.2023 நாளிட்ட கடிதம் மூலமும், தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியத்திற்கும் குடியிருப்புகள் வழங்கிட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, ஆக்கிரமிப்புதாரர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாற்று இடம் அல்லது வீடு வழங்குவது குறித்து அறிக்கை பெற்று அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்றிட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 6.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 15.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் திருச்சி திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையான கன்னிமார் தோப்பு – வடக்கு கோபுரம் சாலை ஒரு சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அங்கு ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் தகரக் கொட்டகையுடன் கூடிய வீடுகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களால் மாடி வீடுகள் போன்று நிரந்தர கட்டடங்களை கட்டாதவாறும், அவ்வாக்கிரமிப்புகளை மாநகராட்சியால் அகற்றிடவும் தேவையான நடவடிக்கையை மாநகராட்சி எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**4. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இளநிலைப் பொறியாளர் 15.11.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் திருச்சி திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோவிலுக்கு செல்லும் பிரதான சாலையான கன்னிமார்தோப்பு – வடக்கு கோபுரம் சாலையில் 23 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகளை கட்டி 40 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு வேறு இடம் வழங்கிடக்கோரி ஸ்ரீரங்கம் வட்டாட்சியருக்கு 14.11.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்திற்கு 14.11.2023 நாளிட்ட கடிதமும்

அனுப்பப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் 14.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளனர்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன:**

மனுதாரர் திருச்சி திருவாணைக்காவலில் அகிலாண்டேஸ்வரி அம்மன் உடனுறை ஜம்புகேசுவரர் கோவில் உள்ளது என்றும் திருச்சி-சென்னை நெடுஞ்சாலையிருந்து இக்கோவிலுக்கு செல்லும் பிரதான சாலை, கன்னிமார் தோப்பு-வடக்கு கோபுரம் திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வெள்ளிதிருமுத்தம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட டவுன் சர்வே வார்டு C பிளாக் 2 நகரளவை எண். 52ல் அமைந்துள்ளது என்றும் இச்சாலையின் அகலம் மாநகராட்சி நில அளவை பதிவேட்டின்படி 0.19.8 மீட்டராக அதாவது 65 அடியாக பதிவாகியுள்ள நிலையில் சிலர் வீடுகள் மற்றும் வேலிகள் அமைத்து அச்சாலையில் 40 அடி வரைக்கும் ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர் என்றும் எனவே இந்த ஆக்கிரமிப்பை அகற்ற கோரியுள்ளார்.

மனுதாரர் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு வருவாய் ஆவணங்களின்படி டவுன் சர்வே வார்டு C பிளாக் 2 நகரளவு எண்.113, சர்க்கார் புறம்போக்கு 0.03190 ச.மீ கொள்ளிட ஆற்று ரோடு என உள்ளது என்றும், இந்த இடத்தில் 23 நபர்கள் வீடு கட்டி 40 வருடங்களாக வசித்து வருவதாகவும், ஆக்கிரமிப்புதாரர்களின் வாழ்வாதாரத்தினை கருதி தகுதியான மாற்று இடம் வழங்கக்கோரி ஸ்ரீரங்கம் வட்டாட்சியருக்கு கடிதமும், தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியத்திற்கும் குடியிருப்புகள் வழங்கிட கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அவர்களின் அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்றிட தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

திருச்சி சென்னை நெடுஞ்சாலையிருந்து ஜம்புகேசுவரர் கோவிலுக்கு செல்லும் 64 அடி அகலப்பாதையில் 40 அடிவரை ஆக்கிரமிப்பு செய்து 40 வருடங்களாக சிலர் வசித்து வருவதற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் வார்டு குழு அலுவலகம் 1ன் அலுவலர்களே காரணம் என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். மாநகராட்சி அலுவலர்கள் அவ்வப்போது களப்பணியில் ஈடுப்பட்டு இருந்திருந்தால், இதுபோன்ற ஆக்கிரமிப்பு நடைபெற்று இருக்க இயலாது என்று இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும் மாநகராட்சியின் அலுவலர்கள் உடந்தையாக இருந்ததால் தான் 40 வருடங்களாக நடைபெற்று வரும் ஆக்கிரமிப்புக்கு எவ்வித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து அதிருப்தி மற்றும் ஆக்கிரமிப்புக்கு காரணமான அரசு அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட 40 வருட ஆக்கிரமிப்புக்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்களே காரணம் என்று இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே, திருச்சி சென்னை நெடுஞ்சாலையிருந்து ஜம்புகேசுவரர் கோவிலுக்கு செல்லும் சாலையில் உள்ள ஆக்கிரமிப்பை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த இயலாது என்பதாலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் அறிக்கையிலும், இளநிலைப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும் உரிய நடவடிக்கை எடுக்கவும், மேற்கொண்டு

அச்சாலையில் எவ்வித ஆக்கிரமிப்பு ஏற்படாத வண்ணம் உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. த. விக்னேஸ்வரன்,
71, 5வது தெரு,
அருணாச்சல நகர், கிராப்பட்டி,
திருச்சிராப்பள்ளி – 620 012.
2. ஆணையர்,
திருச்சி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.
3. உதவி ஆணையர், (ஆணையர் வழியாக),
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
ஸ்ரீரங்கம் மண்டலம்,
வார்டு குழு அலுவலம் - 1,
திருச்சிராப்பள்ளி.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்